# மாந்தை மேற்கு பிரதேச சபை
# மன்னார் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 ஏப்ரல் 21 ஆந் திகதியே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 03 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய மாந்தை மேற்கு பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி மாந்தை மேற்கு பிரதேச சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | செலவினம் | | சொத்துக்கள் | | வருமானம் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | | | ரூபா | | ரூபா |
| நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டல்கள் | - | - | 02 | 2,895,328 | 01 | 15,184 |
| வகைப்படுத்தல் வழுக்கள் | 01 | 17,430 | - | - | - | - |

### 1.3.3 வங்கிக் கணக்கிணக்கங்கள்

(அ) 06 மாதங்களுக்கும் மேற்பட்ட ரூபா 1,205 தொகையான தேறாத வைப்புக்கள் தொடர்பில் வங்கியிடம் விசாரித்தறிந்து பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வழங்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்கள் காலங் கடந்திருந்த ரூபா 57,520 பெறுமதியான 07 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 54,490 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

**கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் இன்மை காரணமாக மொத்தம் ரூபா 6,089,709 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.6 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள். விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இனங்கி ஒழுகாமைகள் |
| --- | --- |
| (அ) பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) ஒழுங்குவிதிகள் - 1988 (i) IV ஆம் அத்தியாயத்தின் 96 ஆம் பிரிவு | பீஎஸ் 35 இற்குப் பதிலாக பொது 35 படிவத்தில் கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டிருந்தது. |
| (ii) IV ஆம் அத்தியாயத்தின் 166 ஆம் பிரிவு | பிரதான பேரேட்டில் பதிவுகளை மேற்கொள் வதற்காக நாளேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 437 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | அரசாங்க வாகனங்கள் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமே காப்புறுதி செய்யப்படுதல் வேண்டுமாயினும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக தனியார் காப்புறுதிக் கம்பனியொன்றில் சபை காப்புறுதி செய்திருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 581,140 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 60,521 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் , நிலுவை வருமானம்

செயலாளரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | 2009 |
| --- | --- | --- |

| வருமான விடயம் | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| வீதவரி மற்றும் வரிகள் | - | - | - | - | - | - |
| வாடகை | 728 | 1,546 | 199 | 445 | 182 | 199 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 134 | 87 | - | 777 | 07 | - |
| ஏனைய வருமானங்கள் | 1,892 | 1,795 | - | 989 | 42 | - |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணங்கள் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவுக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** |
| ஆளுக்குரிய வேதனம் | 6,805 | 6,597 | 208 | 5,299 | 6,328 | (1,029) |
| ஏனையவைகள் | 1,738 | 2,128 | (390) | 2,050 | 484 | 1,566 |
| உப மொத்தம் | 8,543 | 8,725 | (182) | 7,349 | 6,812 | 537 |
| **மூலதனச் செலவு** | 1,106 | 2,467 | (1,361) | 925 | 8,658 | (7,733) |
| முழு மொத்தம் | **9,649** | **11,192** | **(1,543)** | **8,274** | **15,470** | **(7,196)** |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவியணித் தரம் | 03 | 01 |
| இரண்டாந் தரம் | 13 | 07 |
| ஆரம்ப தரம் | 14 | 14 |
| ஏனையவர்கள் (சமயாசமயம்/தற்காலிகம்) | - | 06 |
| மொத்தம் | 30 | 28 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்கள்

மரணித்த, சேவை இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாதுள்ள ரூபா 237,085 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132 (அ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு சந்தர்ப்பத்திற்கான விருந்துபசாரச் செலவினம் ரூபா 1,000 இற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் விருந்துபசாரச் செலவிற்காக ரூபா 58,864 செலவிடப்பட்டிருந்தது.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபையில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமானச் நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்